**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | |
|---|---|---|
| Sessions Case No. | : | 19/2022 |
| | : | Prosecution - **PW-18** |
| Deposition of witness for | : | Defense |

| | | | |
|---|---|---|---|
| Name | : ராஜேஸ்வரி | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 11th day of September 2024.

(1ம் எதிரி கனகராஜ், 2ம் எதிரி சந்தோஷ்குமார், 3ம் எதிரி பிரகாஷ், 4ம் எதிரி அழகுலெட்சுமி (அம்மு), 5ம் எதிரி ஜெயலலிதா ஆகிய 1 முதல் 5 எதிரிகள் ஆஜர்)

முதல் விசாரணை

நான் தற்போது திருப்பூர் மாவட்டம், மத்தியகாவல்நிலையத்தில் சட்டம் ஒழுங்கு காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். 10.02.2018 அன்று பசுபதிபாளையம் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது, அன்றைய தினம் 14.00 மணியளவில் நிலைய பொறுப்பில் இருந்தபோது, மேலப்பாளையம் கிராம நிர்வாக அலுவலர் சரண்யா என்பவர் நிலையத்தில் நேரில் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரைப்பெற்று, பசுபதிபாளையம் காவல்நிலைய கு.எண். 82/2018 ச/பி. 302 இதச-ன் கீழ் வழக்கு பதிவு செய்து, ..........

முதல்தகவல் அறிக்கை தயாரித்தேன். நான் தயார் செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.14. பின்னர் முதல் தகவல்அறிக்கையையும், புகாரையும் கரூர், நீதித்துறை நடுவர் எண்.1 அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். முதல் தகவல் அறிக்கையின் நகலை ஆய்வாளரின் விசாரணைக்காக வைத்தேன்.

1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

புகாரில் இறந்துபோனவர் அடையாளம் மற்றும் பெயர் தெரியாத நபர் என குறிப்பிடப்பட்டுள்ளது. அடையாளம் மற்றும் பெயர் தெரியாத பிரேதம் சம்மந்தமாக வழக்கு பதிவு செய்வதற்கு கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள் எனக்கு தெரியுமா என்றால் புகாரின்படி முதல் தகவல் அறிக்கையை முதலில் பதிவு செய்தேன். அ.சா.ஆ.14 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கான வழிகாட்டுதல்களையும், உயர்நீதிமன்ற அறிவுறுத்தல்களையும் நான் கடைபிடிக்கவில்லை என்றால் சரியல்ல. புகார்கொடுக்கும்போது ஆய்வாளர் நிலையத்தில் இருந்தாரா என்றால் இல்லை. அவர் வேறு இடத்தில் இருந்தார். அ.சா.ஆ.14 முதல் தகவல் அறிக்கை சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தவறான பிரிவுகளின் கீழ் முதல்தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

4 மற்றும் 5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

மேற்படி குறுக்குவிசாணையை ஏற்றுக்கொள்வதாக கற்றறிந்த வழக்கறிஞர்கள் தெரிவித்தார்கள்.

ஒம்/- ஆர்.சண்முகசுந்தரம்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்

மறு விசாரணை

இல்லை.